பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 10 2025 FRIDAY 12.40 PM

தலைப்புச் செய்திகள்

1. உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா சீர்திருத்த பாதையில் முன்னேறி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

2. மக்கள் தங்களது மனநல ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

3. பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில், முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 121 தொகுதிகளில், வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

4. நேட்டோ அமைப்பிலிருந்து ஸ்பெயின் நாட்டை வெளியேற்ற வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

5. உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>

உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா சீர்திருத்த பாதையில் முன்னேறி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

சிட்னியில் இந்தியா – ஆஸ்திரேலியா பாதுகாப்பு தொழில் வணிக மாநாட்டில் உரையாற்றிய அவர், ராணுவ உற்பத்தித்துறை தாராள மயமாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டின் ராணுவ தளவாட உற்பத்தி கடந்த நிதியாண்டில் 51 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் ராணுவ தளவாட ஏற்றுமதி 23 ஆயிரத்து 622 கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<>>>>

உலக மனநல ஆரோக்கிய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மக்கள் தங்களது மனநல ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

பேரிடர் காலங்களிலும், அவசர காலத்திலும் மனநல ஆரோக்கியம் சேவைகள் அளிப்பது என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனநல சேவை எளிதாக அளிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கூறிய திரு ஜெ பி நட்டா, மனநல ஆரோக்கியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பேரிடர் காலங்களில் மக்களின் மனநலத்தை பாதுகாக்கும் வகையில், அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தமிழகத்தின் சேலம் பெரியார் பல்கலைக்கழக உளவியல் துறைப் பேராசிரியர் திரு நித்யானந்தன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>

இந்தியா – ஆப்கானிஸ்தான் இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு Amir Khan Muttaqi -யுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இந்தியா உதவி அளித்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு பிறகு, தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைக்கு ஆப்கானிஸ்தான் ஆதரவு அளித்ததையும் திரு ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>

பசுமை, சுற்றுச்சூழல் எதிர்காலத்திற்கு உலகளாவிய பங்களிப்புக்கு இந்தியா தயாராக இருப்பதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

அபுதாபியில் இதுதொடர்பான மாநாட்டில் உரையாற்றிய அவர், இந்தியாவில் நான்கு பாதுகாக்கப்பட்ட பல்லுயிர் பெருக்க மண்டலங்கள் இருப்பதை சுட்டிக்காட்டினார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும், நிலையான வளர்ச்சிக்கும் உலக நாடுகளுடன் இந்தியா இணைந்து செயல்பட தயாராக இருப்பதாக திரு கீர்த்தி வர்தன் சிங் கூறினார்.

<<<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில், முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 121 தொகுதிகளில், வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

வேட்புமனு தாக்கல் வரும் 17-ஆம் தேதிவரை நடைபெறும்.

வேட்புமனுக்களை திரும்பப்பெறுவதற்கான கடைசி நாள் வரும் 20-ஆம் தேதியாகும்.

பாட்னா, Darbhanga, Muzaffarpur, Vaishali உள்ளிட்ட தொகுதிகளில் அடுத்த மாதம் 6-ஆம் தேதி முதல் கட்டத் தேர்தல் நடைபெறுகிறது.

பீகார் சட்டப்பேரவையின் இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டத் தேர்தல் அடுத்த மாதம் 11-ஆம்தேதி நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14 -ஆம்தேதி நடைபெறும்.

<<<<<<>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர் அடையாள அட்டைகள் இல்லாதவர்கள், ஆதார் அட்டை, பான் கார்டு, ஓட்டுநர் உரிமம், புகைப்படத்துடன் கூடிய வங்கி பாஸ்புக் உள்ளிட்ட 12 புகைப்படத்துடன் கூடிய ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், பீகாரில் பெரும்பாலான வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

புதிய வாக்காளர்களுக்கு, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியான 15 நாட்களுக்குள் அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்று தலைமை தேர்தல் அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<>>>>

ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக திரு Shirish Chandra Murmu பதவியேற்றுக்கொண்டார்.

மூன்றாண்டுகளுக்கு அவர் இப்பதவியை வகிப்பார்.

முன்னதாக, ரிசர்வ் வங்கி நிர்வாக இயக்குனராக அவர் பதவி வகித்தார்.

<<<<<>>>>

சமூக இணையதள கணக்குகளை முடக்குவதற்கு நாடு முழுவதும் நெறிமுறைகள் கொண்டுவர வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக, உச்சநீதிமன்ற நீதிபதிகள் திரு விக்ரம் நாத், திரு சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரிக்க நிராகரித்துள்ளது.

<<<<<>>>>

நேட்டோ அமைப்பிலிருந்து ஸ்பெயின் நாட்டை வெளியேற்ற வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதுகாப்புத்துறையில் அதிக செலவு செய்வதை ஸ்பெயின் மறுத்ததையடுத்து அவர் இதனை தெரிவித்தார்.

2035-ஆம் ஆண்டுக்குள் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்து சதவீதம் பாதுகாப்புத்துறைக்கு செலவிட வேண்டும் என்று கடந்த ஜூன் மாதத்தில் நேட்டோ உறுப்பு நாடுகள் ஒப்புக்கொண்டிருந்தது.

ஸ்பெயின் பிரதமர் திரு Pedro Sanchez இதனை நிராகரிக்கும் வகையில் செயல்பட்டதையடுத்து, திரு ட்ரம்ப் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

<<<<<>>>>

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்புக்கு, அந்நாட்டு நாடாளுமன்றத் தலைவர் திரு Amir Ohana அழைப்பு விடுத்துள்ளார்.

தங்களின் நெருங்கிய நண்பராக திரு டொனால்டு ட்ரம்ப் திகழ்வதாக யூத மக்கள் கருதுவதாக அவர் கூறியுள்ளார்.

ஹமாஸ் அமைப்பின் பிடியில் உள்ள இஸ்ரேல் பிணைக்கைதிகளை விடுவிப்பதற்கு திரு ட்ரம்ப் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் அறிவித்ததையடுத்து, அமெரிக்க அதிபருக்கு, திரு Amir Ohana இந்த அழைப்பு விடுத்துள்ளார்.

<<<<<<>>>>

பாகிஸ்தானுக்கு நவீன AMRAAM ஏவுகணைகளை வழங்க அமெரிக்கா மறுத்துள்ளதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அமெரிக்க தூதரகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்க வெளிநாட்டு ராணுவ தளவாட ஒப்பந்தத்தில் திருத்தம் கொண்டுவந்தது, பாகிஸ்தானுக்கு புதிய ஆயுதங்கள் வழங்குவதற்கு அல்ல என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா இந்த ஏவுகணைகளை பாகிஸ்தானுக்கு வழங்க உள்ளதாக வந்த செய்திகளையடுத்து அமெரிக்க தூதரகம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜூனியர் கலப்பு குழு பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

----------------

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - ருதுஜா போஸ்லே இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், இந்த அஇணை 6-4, 6-2 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் Dayeon Back – Eunhye Lee இணையை வென்றது.

----------

17 வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Jennifer Varghese பட்டம் வென்றார்.

பெர்தில் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், அவர், 3-1 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் Constantina-வை வென்றார்.

-----------------

கொச்சியில் நடைபெற்றுவரும் பார்வையற்றோருக்கான உலக மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா ஐந்தாவது இடத்தை பிடித்தது.

--------------

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்து வரும் இந்தியா, சற்றுமுன் வரை ஒரு விக்கெட் இழப்புக்கு 130 ரன் எடுத்துள்ளது.

தில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

-----------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் குஜராத் – தில்லி அணியையும், பெங்கால் – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<END>>>>